புலமைப்பரிசில் வகுப்பு
ஆண்டு 5 புலமைப்பரிசில்
நாளாந்த சனி, ஞாயிறு
வகுப்புக்கள்
ஆண்டு 3 தொடக்கம்
ஆண்டு 9 வரை
சகல பாடங்களும்
ஆரம்பமாகியுள்ளன
புதிய கல்வி நிலையம்
291, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

விற்பனையாகிறது!
புலமைப்பரிசில் பயிற்சி
21 கட்டுரைகள்
10 மாதிரி வினாத்தாள்கள்
விடைகளுடன்
எல்லாப் புத்தகசாலைகளிலும்
பெற்றுக்கொள்ளலாம்

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 28 சனிக்கிழமை (13 – 11 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 350

# பூநகரி தாக்குதலில் 700க்கு அதிக படையினர் பலி!

# துருப்புகளை முற்றாக அழிக்க உக்கிரச் சண்டை!!

### தீபாவளி வாழ்த்து

வாசகர்கள், விளம்பரதாரர்கள், விற்பனையாளர்கள், செய்தியாளர்கள், அபிமானிகள், ஆதரவாளர்கள் அன்பர்கள் அனைவருக்கும் உதயனின் உளம் நிறைந்த தீபாவளி வாழ்த்துகள் உரித்தாகுக. தமிழர் வாழ்வில் ஒளி வீசட்டும்.

## சிக்குண்ட சிப்பாய்களை மீட்பதற்கு ராணுவம் எடுத்த முயற்சி பலிக்கவில்லை

யாழ்ப்பாணம், நவம்பர் 13

பூநகரி படைத்தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்ததை அடுத்து, தப்பியோடிய சிப்பாய்களை சுற்றி வளைத்து அழிப்பதற்காக அவர்களுடன் தொடர்ந்து புலிகள் கடும் சண்டை புரிந்து வருகின்றனர். இது வரை எழுநூறுக்கும் அதிகமான படையினர் உயிரிழந்திருப்பதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன.

சிக்குண்ட சிப்பாய்களை மீட்பதற்கு இராணுவம் எடுத்த முயற்சியும் பலிக்கவில்லை.

ஸ்ரீலங்கா விமானப் படையின் பலத்த குண்டு வீச்சுகளுக்கும், கடற்படையினரின் கடும் தாக்குதல்களுக்கும் மத்தியில் விடுதலைப் புலிகள் வீரர்கள் கொட்டும் மழையிலும் தொடர்ந்து உக்கிரச் சண்டை புரிந்து வருகிறார்கள்.

படைத் தளத்திலிருந்து தப்பியோடி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் சிக்குண்டிருக்கும் துருப்புகளை மீட்பதற்கு முப்படைகளும் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன.

தரையில் சிக்கியிருக்கும் சுமார் 900 படையினரின் உயிரைக் காப்பாற்ற அரசு முயற்சித்து வருவதாக கொழும்பில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

சிக்கியிருப்போர் சாகும் வரையான போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாக இராணுவத் தரப்பில் கூறப்படுகிறது.

நாடெங்கும் இருந்து திரட்டப்பட்ட மேலதிக துருப்புகள் வடபகுதிக்கு விமானம் மூலம் கொண்டு வரப்பட்டதாகவும்—

ஆனால் இத்துருப்புகள் பூநகரியை அடைய பெரும் தூரம் இருப்பதாகவும் — இராணுவ அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்தனர்.

சிக்குண்டவர்கள்

சிறு சிறு குழுக்களாக நூற்றுக் கணக்கான சிப்பாய்கள் புலிகளின் பிடியில் சிக்குண்டுள்ளனர் என்றும்—

(5 ஆம் பக்கம் பார்க்க)

பூநகரித் தாக்குதல்:
மற்றும் செய்திகள்
5 ஆம் பக்கத்தில்

### ஊரடங்கு

கொழும்பு, நவ. 13

வடமாகாணத்தில் நேற்று மாலை 5 மணி முதல் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்திருக்கிறது.

(உ–எ)

## அள்ளப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், நவ. 13

பூநகரி சமரில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட இராணுவ தளபாடங்களில் இதுவரை கணக்கெடுக்கப்பட்ட தளபாடங்களின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ நீருந்து விசைப் படகுகள் | — | 5 |
| ★ இராணுவ டாங்கிகள் | — | 2 |
| ★ 120 மி.மீ. நீண்ட தொலைவு பீரங்கி | — | 4 |
| ★ ஆர்.சி.எல். 106 மி.மீ. பின்உதைப்பற்ற பீரங்கி | — | 1 |
| ★ 50 கலிபர் கனரக இயந்திர துப்பாக்கிகள் | — | 13 |
| ★ ஏ.கே. எல். எம். ஜி. | — | 16 |

(5ஆம் பக்கம் பார்க்க)

## 200 க்கும் அதிக புலிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், நவ. 13

பூநகரி சமரில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இருநூறுக்கும் மேற்பட்ட போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ''தவளை'' இராணுவ நடவடிக்கையின் போது வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கு தமிழீழ மக்கள் தமது உணர்வு பூர்வமான அஞ்சலியை செலுத்தி வருகின்றனர்.

மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் குடாநாட்டில் வீடுகள், கடைகள்,

(5 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ் செயலகம் மீது விமானக் குண்டு வீச்சு!

# அரசாங்க அதிபரும் மற்றும் 25 பேரும் காயம்!!

## கடமையிலிருந்த காவல்துறை உறுப்பினர் பலி!!!

யாழ்ப்பாணம், நவ. 13

ஸ்ரீலங்கா விமானப்படையைச் சேர்ந்த 'சுப்பர் சொனிக்' விமானங்கள் நேற்றுக் காலை யாழ். அரச செய



யாழ். அரச அதிபர்

லக வளாகப் பகுதியில் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தின. இச்சம்பவத்தின் போது யாழ். செயலகத்தில் கடமையில் இருந்த அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் காயம் அடைந்தார். சம்பவ நேரம் வீதிப்போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த தமிழீழ காவல்துறை உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார்.

காயமடைந்த மொத்தம் 25 பேரில் வீதிப் போக்குவரத்துக் கடமையில் இருந்த தமிழீழ காவல் துறை உறுப்பினர்கள் 6 பேர். யாழ். செயலக ஊழியர்கள் 6 பேர். மற்றும் வீதியால் சென்று கொண்டிருந்த பொது மக்கள் ஆகியோரும் அடங்குவர்.

காலை 8.30 மணி அளவில் இக் குண்டு வீச்சுக்கள் இடம் பெற்றன.

முற்றாகச் சேதம்

இத்தாக்குதல்களின் போது அரச அதிபரின் அலுவலகம் முற்றாகச் சேதம் அடைந்தது.

அலுவலகத் தளபாடங்கள், மாநாட்டு மேசை, கதிரைகள் அரச அதிபரின் மேசையில் இருந்த மிக முக்கிய ஆவணங்கள் என்பன சிதைந்து காணப்பட்டன.

யாழ். அரச அலுவலகம் இயங்க முடியாத அளவுக்குச் சேதம் அடைந்துள்ளது.

செயலகத்தில் உள்ளிட்டப் பணிப்பாளரின் அலுவலகம், மேலதிக அரச அதிபரின் அலுவலகம், பிரதி மாவட்ட ஆணையாளரின் அலுவலகம், பிரதம கணக்காளரின் அலுவலகம், நிர்வாகக்கிளை, சமூக சேவைப்பகுதி, புனர்வாழ்வுக் கிளை உட்பட பிர

(5 ஆம் பக்கம் பார்க்க)

## மேசையின் கீழ் படுத்து

## மயிரிழையில் உயிர் தப்பினேன்

## யாழ். அரச அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ. 13

முதலாவது குண்டு வீசப்பட்ட சமயம் செயலகத்தின் மேல் கூரைத் தகடுகள் உடைந்து விழுந்தன. நான் பாதுகாப்புக் கருதி எனது மேசையின் கீழ் படுத்துக் கொண்டேன். சத்தம் சிறிது குறைந்தபோது செயலகத்தின் பின்புறம் நோக்கிச் செல்வதற்காக படிகளில் இறங்கிச் செல்ல முயன்றபோது அடுத்த குண்டுச் சத்தமும் கேட்டது.


குண்டு வீச்சு நடந்தபோது தொடர்ந்து எனது அறையில் இருந்திருந்தால் எனக்கு உயிராபத்து ஏற்பட்டிருக்கலாம். தெய்வாதீனமாக மயிரிழையில் காயத்துடன் தப்பிக் கொண்டேன்.

செயலகம் மீதான
குண்டு வீச்சு:
மற்றும் படங்கள்
செய்திகள்
6 ஆம் பக்கத்தில்

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், நேற்று தமக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவம் குறித்து மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முதலாவது குண்டு வீச்சின் போதே தாம் காயம் அடைந்ததாகவும் தமது நெஞ்சில் இருந்து அதிக அளவு இரத்தம் வெளியேறியதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

(5ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய தாக்குதலில் சேதமடைந்த அரச அதிபரின் அலுவலக அறையை மேல் படத்திலும் அவரது மேசையை அதற்குக் கீழ்ப் படத்திலும் காணலாம்.



குண்டு வீச்சில் சேதமடைந்து காணப்படும் யாழ். செயலகத்தின் முன்புறத் தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள், பன்டம் கோழிமுட்டைகள், வான்கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர் இல: 19, முருகேசர் ஒழுங்கை முத்திரச்சந்தையடி, நல்லூர். (27828)

புதிய இரும்பு அலுமாரி (Steel Cub Board) இருலாச்சிகளுடன் மற்றும் வீட்டு தளபாடங்களும் உடன் விற்பனைக்கு உண்டு. டாஸ் கொம்பிளெக்ஸ் இல. 161, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (மக்கள் வங்கி அருகில்) (6802)

### அப்பியாசக் கொப்பி

மாணவர்களின் சீருடைகள் பிரகாசமான வெண்மையுடன் விளங்கிட மில்க்வைற் நீல சோப், மில்க்வைற் சலவைத்தூள் உதவுகின்றன. 25 மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் / சலவைத்தூள் வெற்றுப் பக்கற்றுகள் தருபவர்க்கு ஒரு அப்பியாசக் கொப்பி அன்பளிப்பு. ''மில்க்வைற்'' (சி-6350)

### O/L வினா - விடை

உயர் கல்விச்சேவை நிலைய கடந்தகால வினாவிடையும், அப்பியாசக் கொப்பிகளும் மலிவு விலையில் விற்பனையாகின்றன. அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (சி-6533)

### தேவை

பேக்கரி வேலைக்கு அனுபவம் உள்ள ஒருவர் (வாஸ்) தேவை. அடையாள அட்டையுடன் நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்க்கப்படும். துர்க்கா பாணகம், நீர்வேலி கந்தசுவாமி கோயில் அருகில் பருத்தித்துறை வீதி, நீர்வேலி. (6599)

### மணமகன் தேவை

இந்து, 36 வயது (செவ்வாய்க் குற்றமற்ற கேட்டை) அழகிய மணப்பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (27912)

### மணமகள் தேவை

ஆலி வீசா ஒழுங்குள்ள 42 வயது பட்டதாரியை மணந்து 30-11-93க்கு முன்னர் கொழும்புக்கு வரக்கூடிய செவ்வாய், சனி தனித்தனி ராகுவோ கேதுவோ கூடியுள்ள ஜாதகமுள்ள மணமகள் உடன் சுயமாக விண்ணப்பிக்கவும். மே/பா 22, உதயன் சேவை நிலையம், கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (6721)

### திருத்தவேலைகள்

உத்தரவாதத்துடன் மணிக்கூடுகள், றேடியோக்கள் திருத்தப்படும். உதிரிப்பாகத்திற்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். டில்கா வாச் & றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி றோட் (வானவில் அருகில்). கிளை: கண்டி றோட், சாவகச்சேரி. (சி-6176)

### தவறிவிட்டது

10-11-93 அன்று கோண்டாவில் நாகபூஷணி அம்மன் வீதியிலிருந்து பலாலி வீதி வழியாக கந்தர்மடத்திற்கும் கஸ்தூரியார் வீதியில் முடிவடையும் அரசடி வீதிக்கும் இடையில் கைச்சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல: 561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அருகில்) என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். (28008)

11-11-93 மாலை 5-30—6-30க்கு இடையில் மூன்றரை பவுண் தங்கக் கைச்சங்கிலி உரும்பராய்க்கும் நீர்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வ. மயில்வாகனம், மே/பா கு. கனகலிங்கம், நீர்வேலி மத்தி, நீர்வேலி விலாசத்திற்கு அறிவிக்கவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும். (28024)

---

இந்துவின் மைந்தனுக்கு

## எம் இதய அஞ்சலிகள்

### கடற்புலி விவேகன்


(பா. பாலசொரூபன்)
(1994 கணிதப் பிரிவு)

இன்றுடன் முடிந்ததா உன் கதை
இல்லை சொரூபா!
இல்லை.
பள்ளி மதில்களின்
வெள்ளைச் சாந்தினைக் கேட்டுப்பார்
அது
உன் சிரிப்பை எமக்குச்
சத்தியம் செய்யும்
அசோகா மரங்களின்
அசாத்திய நிமிர்விலும்
நாம் காண்பது உன் கம்பீரமல்லவா!
அலை இருக்கும் வரை
எங்கள் இதயங்கள் இருக்கும் வரை
நீ இருக்கப் போகிறாய்
இங்கு ஓர் நாடு
உதிக்கப் போகிறது
உண்மை நிச்சயம்.

உயர்தர மாணவர் ஒன்றியம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
(இ/6359)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 10 | 14 |
| 10 | 10 |
| 1926 | 1993 |

### அமரர் இராமலிங்கம் சதாசிவம்

(நீர்கொழும்பு சென்றல் பூட் எம்போறியம்)

எங்களின் நெஞ்சங்களில் என்றும் அணையா ஒளிவிளக்காய் திகழும் தங்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பேரப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், பல்வேறு வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்,

மனைவி, பேரப்பிள்ளைகள்.

'பூமகள் வாசம்',
வதிரி,
அல்வாய். (6597)

---

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### தம்பிப்பிள்ளை செல்வரட்ணம்

(இளைப்பாறிய தபால் திணைக்கள நிர்வாக அதிகாரி)

| அன்னை மடியில்: | அந்நியர் அழிப்பு: |
|---|---|
| 20 - 12 - 1924 | 20 - 10 - 1987 |

அன்புத் தெய்வமே! ஆண்டுகள் ஆறு சென்றாலும், இதய ஆழத்தில் பதிந்த அன்பு, பாசம் என்றும் மாறாதது எம் உயிர் உள்ளவரை உங்கள் நினைவு எமக்கு வழிகாட்டும்.

உங்கள் அன்பான நினைவோடு வாழும்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

39, விதாலையார் வீதி,
வல்வெட்டித்துறை. (28006)

---

## ஐக்கிய கரோல் ஆராதனை
## (COMBINED CAROL SERVICE)

இன்று 13 — 11 — 1993 சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருந்த ஐக்கிய பாடசாலைகளின் கரோல் கீத ஆராதனை தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

S. தனபாலன்,
விழா ஒருங்கமைப்பாளர்.
(28025)

---

## 3ஆம் ஆண்டின் பாச நினைவலைகள்



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 24 | 13 |
| 12 | 11 |
| 1933 | 1990 |

### அந்தோனிப்பிள்ளை சிங்கராயர்

ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட
எம் இனிய தந்தையே
மூன்றாண்டு சென்றாலென்ன
முப்பதாண்டு சென்றாலென்ன
உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது!

உமது ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

சில்லாலை கிழக்கு,
பண்டத்தரிப்பு. (28010)

---

## ஆறாம் மாத கண்ணீரலைகள்



வைத்திய கலாநிதி

### செல்வி வசந்தகுமாரி வைத்திலிங்கம்

(யாழ். போதனா வைத்தியசாலை)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 26-05-1961 | 13-05-1993 |

நிமிர்ந்த நடையுடனே நேர்கொண்ட பார்வையுமாய்
பண்புடனே வாழ்ந்த கலாநிதி வசந்தாவே!
மின்னலைப் போல நீயும் மண்ணுலகில்
ஒளிர்ந்து விட்டு
சடுதியில் மறைந்து விட்டாய் எங்கள் சக்தியும்
அழுந்துதம்மா
ஆறு மாதமாய் நாங்கள் அனலில் வேகுகின்றோம்
எம் ஆறாத்துயர் கண்டும் அமைதி கொண்டதேனோ
மீளாத்துயில் கொண்டு விட்டாய் நாம் மீள வழியில்லை
மீண்டும் நீ வாராயோ வசந்தம் தவழ வாழ்விலே
ஓம் சாந்தி

உன் குடும்பத்தினர்.

இல. 97, செம்மணி வீதி,
நல்லூர். (28026)

---

உ
உரும்பராய்
சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவில்

## கந்தசஷ்டி விழா

14-11-93 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 19-11-93 வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 9-00மணிக்கு அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று கந்தபுராண படலம் உரை இடம்பெறும்.

14-11-93 ஞாயிற்றுக்கிழமை முதல் 18-11-93 வியாழக்கிழமை வரை தினமும் மாலை 4-30மணிக்கு

தொடர் விரிவுரை:

### "கந்தவேள் கருணையமுதம்"

நிகழ்த்துபவர்:-

**ஆறு திருமுருகன் B. A.**
(ஆசிரியர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

19-11-93 வெள்ளிக்கிழமை பி. பகல் 3 மணிக்கு சூரன் போர் வைபவமும்,

20-11-93 சனிக்கிழமை திருக்கல்யாண வைபவமும் மாலை 430 மணிக்கு தொடர் விரிவுரை பூர்த்தி விழாவும் இடம்பெறும்.

பரிபாலன சபையினரும்,
விழா உபயகாரர்களும்.
(28022)

---

## நல்வாழ்த்து

### கல்விக்கலாநிதி ஆ. சின்னத்தம்பி
### திருமதி பார்வதி சின்னத்தம்பி (பீ. ஏ.)

கரவெட்டி விக்னேஸ்வராவின் முன்னாள் ஆசிரியர்கள்

13-11-1993 அன்று அறுபதாம் ஆண்டுப் பூர்த்தி விழாவினைக் கொண்டாடும் எங்கள் ஆசிரிய குடும்பத்தினரின் அன்பும், அடக்கமும், பண்பும் கலந்த அருமந்த சேவைகளை என்றும் நினைவில் கொண்டு அவர்களைச் சீரும் சிறப்புடனும் நூறாண்டு வாழ வாழ்த்தும் மாணவ குடும்பம்.

வி.செ.சுவாமிநாதன், இலங்கை திட்டமிடல் சேவை, யாழ். மாவட்ட திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர்.
மகேஸ்வரி சுவாமிநாதன், பட்டதாரி ஆசிரியை விக்னேஸ்வராக் கல்லூரி.
(27990)

---

## மரத்தினாலான தளபாடங்கள் வழங்கல்

பின்வரும் மரத்தளபாடங்களை வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. புத்தக ராக்கை (Book Shelf) — 15 nos
2. உத்தியோகத்தர் மேசை- (Executive Table) — 02 nos
3. கதிரை (Arm Chair) — 02 nos
4. அட்டைக் கோவைப் பெட்டி- (Card Catalogue Cabinet) — 04 nos
5. கண்ணாடி அலுமாரி- (Glass Fronted Almyrah) — 03 nos

இவற்றிற்கான வரைபடங்களையும் மற்றும் விவரங்களையும் 16 - 11 - 1993 இற்கும் 19 - 11 - 1993 இற்கும் இடையில் அலுவலக நேரத்தில் யாழ். பல்கலைக்கழக நிதியாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்,

இவற்றைப் பெற விரும்புவோர் ரூபா 250/-இனை மீளளிக்கத்தகாத வைப்புப் பணமாகவும் ரூபா 3,000/- இனை மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாகவும் யாழ். பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 25 11 - 1993 காலை 10-00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினம் 10-30 மணிக்கு திறக்கப்படும். கேள்விப்பத்திர உறையின் இடது பக்க மூலையில் '' மரத்தளபாட கேள்விப் பத்திர விண்ணப்பம் '' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

- பதிவாளர்.
(சி-6335)

---

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி சுசரிதா தியாகலிங்கம்
(சாம்பவி)

அன்னாரின் மரணச் செய்தியறிந்து அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அவரை இழந்து நிற்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

மக்கள் வங்கி-
கன்னாதிட்டி ஊழியர்கள்.
(28029)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளிச் சிறப்பிதழ்

## அருத்தவன் பசி இன்றி வாழக் காண்பது கடவுளைக் காண்பதற்கு நிகரானது

### இதனை தீபாவளிச் சிந்தனையாகக் கொள்வோம்

தீப ஆவளி என்ற இரு சொற்கள் சேர்ந்து தீபாவளியாயிற்று. தீபங்களின் வரிசை என இது பொருள்படும். தீபத்திருநாள் இதுவாகும். இத்தினத்தில் இல்லத்தரசிகள் வீடுகள் தோறும் தீபங்களை வரிசையாக ஏற்றி வழிபாடாற்றுவார்கள்.

தீப மங்கள சோதி, நமோ! நமோ! என தீபத்திற்கு வந்தனை புரிவார்கள். திருவிளக்குப் பூசை மனை நலம் விளங்க மாதர் புரியும் வழிபாடாகும். வருடம் ஒரு முறை வரும் இத்தீபத் திருநாள் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் நன்னாள். இருளை அகற்றி ஒளியை பெருக்கும் திருநாள்.

இல்ல விளக்கது இருள் கெடுப்பது. அது இருளை அகற்றி ஒளியை ஏற்படுத்துவது. இதன் உட்பொருள் மனத்தின் இருளை அகற்றி ஒளியைப் பெருக்க வேண்டும் என்பதேயாகும். மனத்தில் ஏற்படும் ஒளியை, அறிவு, ஞானம் எனலாம்.

அகிலத்தில் ஏற்படும் துன்பங்களுக்கு அடித்தளமாக அமைவது மக்களின் அறியாமையேயாகும். அதனாலேயே அறியாமையை அகற்றி அறிவினை வளர்ப்பதற்கு மக்கள் அரும்பாடுபடுகின்றனர்.

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னா சொல் இவற்றை அகற்றி அறிவொளியை ஏற்படுத்தினால் அகிலம் அமைதியுறும். அதிக நன்மை பெறும். சுடர்மிகும் அறிவு வேண்டும் என்றார் பாரதியார்.

அறிவுக்கு மேம்பட்ட நிலையான அருள் எல்லோரிடமும் அன்பு காட்டும் தன்மை — ஒருவரை ஆத்மபலம் உடையவராகவும் சற்குருவாகவும் ஆக்கிவிடுகின்றது.

இறைவன் சோதிமயமானவன். இதனை நமது அருளாளர்கள் உறுதிப்படக் கூறிப் போந்துள்ளனர். பிரியும் உயிர் இறைவனோடு இணைதல் சோதியுட் கலத்தல் எனக் கூறப்படுகின்றது. ஆதி அந்தமில்லாத சோதியை ஓதி உணர்ந்து நன்மையடைவது நம்கடன்.

#### அகதிகளுக்கு உதவுங்கள்

தீபாவளி பற்றிய புராணக் கதை ஒன்றுள்ளது. நரகாசுரன் என்ற துட்டன் மகா பராக்கிரமசாலி. எனவே அவன் இறுமாப்புக் கொண்டான். நல்லவர்களை வருத்தினான். நல்லவர்களின் முறையீட்டை கருத்திற்கொண்ட இறைவன் காத்தற் கடவுளாகிய விஷ்ணுமூர்த்தியாகத் தோன்றி அசுரனைக் கொன்றார்.

இறக்கும் தறுவாயில் அவன் ஒரு வரம் வேண்டினான்.

நான் இறக்கும் இத்தினத்தில் என்னை அர்ச்சித்து வழிபடுவோர்க்கு கருணை வழங்க வேண்டும் என்பதே அவ்வரமாகும். அவன் கேட்ட வரம் வழங்கப்பட்டது. அன்று தொடக்கம் தீபாவளியும் கொண்டாடப்படுகின்றது.

இறைவன் துட்டர்களை அழித்து அடியார்களைப் பேணுவான் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். கெட்டவர்களும் நினைவு கூரப்படுவதற்கு இவ்விழா ஓர் உதாரணம்.

புதிதுடுத்தி புனிதனை வணங்கும் நாளாக இத்தினம் அமையவேண்டுமேயன்றி

(4 ஆம்பக்கம் பா...)

— ஈஸ்வரி —


வாடிக்கையாளர்கள்
அன்பர்கள்
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்

யாழ். நகரில் தரமானதும் சுவையானதுமான தயாரிப்புகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்
கல்யாணி கிறீம் ஹவுஸ்
73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சகல விதமான மூக்குக் கண்ணாடி வகைகளுக்கும்
● இன்றே நாடுங்கள்
எரிக் கனேஷ்
556, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சகல விதமான கடிகாரங்களையும் திருத்துவதற்கும் புதிதாக பெற்றுக் கொள்வதற்கும்
குணம் அன் கோ
21 A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
★ சிறந்த ஸ்தாபனம்
ஞான துர்க்கா நகை மாளிகை
218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
நியூ லலிதா ஜுவல்லர்ஸ்
தங்கப் பவுண் நகை வியாபாரம்
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கண் பரிசோதித்துக் கண்ணாடி கொடுப்பவரும் பல்கட்டுபவரும்
D. சேனாதிராஜா
இல. 4, பருத்தித்துறை வீதி,
(ஆஸ்பத்திரிச் சந்தி)
யாழ்ப்பாணம்.

ரவி அன் ராஜ் சில்க்ஸ்
RAVI AND RAJH SILKS
77, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

● எமது புதிய இடமாற்றம் 239
புனிதா நகை மாளிகை
239, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வீடியோ ஜீவிதா
ஓட்டுமடம் சந்தி,
யாழ்ப்பாணம்.

பெரியவர்கள் சிறுவர்களுக்கேற்ற றெடிமேட் ஆடைகளைப் பெற்றுக்கொள்ள
ராக மாலிகா ஆடை அகம்
4, நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

★ யாழ். நகரில்
பழைய, புதிய படங்களை பதிவு செய்யவும் வாடகைக்கு பெறவும் சிறந்த இடம்
குணம் வீடியோ சென்ரர்
(KUNAM VIDEO CENTRE)
42, CLOCK TOWER ROAD,
JAFFNA.

சிறந்த ரக கலர், கறுப்பு வெள்ளைப் படங்களுக்கு அன்றும் இன்றும் பெயர் பெற்றவர்கள்
பாரத் ஸ்ருடியோ
82A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள்
அன்பர்கள்
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்

சகல விதமான
கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள்
முதலியன மலிவு விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.
அல்டி
269/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

முகத்துக்கு இணைந்த கண்ணாடிகளைப் பெறவும்





அழகுறப் பற்களைக் கட்டிக் கொள்ளவும் நாட வேண்டிய இடம்:
பி. ஜ. பர்னான்டோ
542, ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்)
யாழ்ப்பாணம்.

★ உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள வைபவங்களை சிறந்த முறையில் (மிக்ஸிங்) வீடியோ படம் பிடித்திடவும்
★ நெஞ்சை விட்டகலா பழைய, புதிய திரைப்பட பாடல்களை சிறந்த முறையில் ஓடியோ ஒலிப் பதிவு செய்திடவும்
★ வீடியோ படக் கசெட்டுகளை வாடகைக்கு பெற்றிடவும்.
சுப்பஸோ
வீடியோ ஓடியோ சென்ரர்
(SUPPERSO
VEDIO & AUDIO CENTRE)
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

ஜெயா அழகு சாதன மாளிகை
177, A மின் நிலைய வீதி,
160, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

ரேகா
25, 48, பெரியகடை, யாழ்ப்பாணம்.

★ உங்கள் இல்லங்களில் நிகழும் மங்கள வைபவங்களை இயற்கை வண்ணங்களுடன் வீடியோ படமாக்கிக் கொள்ளவும்
★ TV வீடியோ டெக், வீடியோ கமரா போன்றவற்றை உடனுக்குடன் திருத்திக் கொள்ளவும்
எவர் விஷன்
21, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்.






எமது வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள், பாலர்கள் எல்லோருக்கும்
எமது தீபாவளி வாழ்த்துக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளிச் சிறப்பிதழ்


✲ வாடிக்கையாளர்கள்
✲ அன்பர்கள்
✲ ஆதரவாளர்கள்
✲ அனைவருக்கும்

எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்

நவநாகரீக டிசைன்களுக்கு உத்தரவாதத்திற்கு உறுதியான வேலைக்கு

★ 18 கரட், 20 கரட் நகை உடன் பெற்றுக் கொள்ள
★ 22 கரட் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.
★ வெள்ளி கால் கொலுசுகள் உடன் பெற்றுக் கொள்ள:



கயல் விழி
நகைப் பூங்கா
(தங்கப் பவுண் நகை வியாபாரம்)
224/B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



படப்பிடிப்பாளர்கள்
(கறுப்பு வெள்ளை / வர்ண / வீடியோ படப்பிடிப்பு வேலைகள்)

கே.எஸ்.ஆர். போட்டோ
766,
காங்கேசன்துறை வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.



மங்கையர், ஆடவர் மனத்தைக் கொள்ளை கொள்ளும் வர்ண வர்ண பட்டு, பருத்தி புடைவைக் கடல் நான் நீயெனப் பாராட்டத் துடிக்கும் கொஞ்சும் அழகில் புதுவகை டிசைன்களை வர வழைத்து வழங்கும் ஒரே ஜவுளி சமுத்திரம்!!

கல்யாண முகூர்த்தப் புடைவைகளின் கைராசியான ஸ்தாபனம்:

சீமாட்டி ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



யாழ். நகரில் தரமானதும் சுவையானதுமான
✲ ஐஸ்கிறீம் வகைகள்
✲ குளிர்பான வகைகள்
✲ சிற்றுண்டி வகைகளை
சுவைத்து மகிழுங்கள்

லிங்கம் கூல் பார்
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.


## அறம் வெல்லும்

அறம் மறத்தை வென்ற தத்துவத்தை காலம் கடந்தும் போதிக்கிறது தீபாவளி. தீபாவளி ஒளிக்கு முக்கியத்துவம்கொடுக்கும் நாள். இருளை அகற்ற ஒளி அவசியம். மனிதர்க்கும் மன இருளைப் போக்க ஒளி தேவை. புற இருளைப் போக்க சூரிய, சந்திரர் உண்டு. அக இருளைப் போக்க நல் மன ஒளி தேவை. அந்த ஒளியைக் குறிக்கும் தினமாகவே தீபாவளி அமைகிறது.

வறுமையும், புலம்பலும் மிகுந்த உலகில் மனிதனே இருளை அகற்ற ஒளி புகுவது எங்ஙனம்? நரகாசுரனைப் போன்ற ஆயிரக் கணக்கான கலியுக நரகாசுரர்கள் மனிதர்களை வதைக்கும் போது தீபாவளியின் தத்துவம் தான் என்ன? இப்படி அங்கலாய்க்கும் தமிழர்கள் தங்களைத் தாமே நொந்து கொள்கிறார்கள்.

ஆனால் உலகில் தர்மம் தான் நிலைக்கும். அறம் மறத்தை

கே. வை.

வெல்லும். மறம் வெற்றி கொண்டதாக புராணமோ, வரலாறோ இல்லை. அதைத் தான் தீபாவளித் தத்துவமும் எமக்கு உணர்த்துகின்றது.

எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவன், மக்கள், தேவர், நரகர் என்ற பேதமின்றி அருள் சுரக்கிறார். அவர் மகத்துவம் விவரிக்க முடியாது. தம் மேல் பக்தி பூண்டொழுகுபவர்களுக்கு பற்பல வரங்களையும், அனுக்கிரகங்களையும் நல்கும் இறைவன் தன்னை வழிபடும் அசுரர்களுக்கும் எண்ணியவரங்களை ஈந்தார் வரம் பெற்ற அசுரர்கள் வரத்தின் பெருமையால் கர்வம் கொண்டு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்தவன்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்க் கொலை செய்து உயிர் குடிக்கும் மது வருந்தும் நாளாக இது மாறி, புனிதத் தன்மையைக் கெடுக்கக் கூடாது.

கொண்டாட்டங்களைச் சுருக்கி, இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு அகதி முகாம்களில் திண்டாட்டமுறும் மக்களுக்கு அப்பணத்தை வழங்கினால் அவர்கள் உண்டு உயிர் வாழ்வர். அடுத்தவன் பசியின்றி வாழக் காண்பதும் கடவுளைக் கண்டதற்கு நிகரானதாகும். ★

## கண்ணா காத்திட வந்திடு!

நமது மண்ணைச் சுற்றி
நரகாசுரர்கள் வலம்
வகை வகையாக.....
வதைப்புக்களோ மிகப் பல
காத்தற் கடவுளே,
கிருஷ்ண பரமாத்மா!
அதர்மம் ஓங்கும் போது,
அவதாரம் என்றாய்!
இந்த நிலத்தில்,
ஆதர்ம ஆற்றில்
அவதிகள் கூறுகின்றோம்
நீயறிய வில்லையா?
கொடியவரை எதிர்த்து,
கருவிகள் கக்குகின்ற
ஒளி வீச்சுக்கள்
உனக்குத் தெரியவில்லையா?
அதைப் பார்த்தாவது
அவதாரம் எடுத்திடு
தீபாவளிப் பெருநாளிலும்
தமிழரின் மழவையர்
களத்திலேயே கண்ணா
காத்திட வந்திடு
எமது மண்ணின்
இடர்களைப் போக்கிடு!

— மீசாலையூர் கமலா.

## இருள் விலகட்டும்

தீபங்கள் தருகின்ற ஒளியதுவும் பெருகத்
தரணியிலே சூழுகின்ற இருளதுவும் விலகப்
பாவங்கள் யாவையுமே ஒழிந்துநலம் சேர்க்கும்
புண்ணியமாம் நெறியதுவே ஓங்கிடுக விளங்க
யாவுமிங்கே நன்மையதாய்த் திகழ்ந்துவளம் கொழிக்கப்
பெருமைமிகு நாளதுவாம் தீபாவளி நாளதனில்
தேவனவன் கண்ணனது கருணையினை நாடித்
திருவடியைத் தொழுவோமே நெஞ்சமது நெகிழ!

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.


சோலையினைப் பூக்களால்
சோபையடைந்த வண்டினம் போல்
சோபனாவின் புடைவைத் தெரிவுகளால்
சோபித்த அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் சோபனா ஆடை அக
ஸ்தாபனத்தாரின்
உளம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்!

சோபனா ஆடை அகம்
16, பெரியகடை, யாழ்ப்பாணம்.




மேகக்கருக் கண்ட மயிலினம் போல்
மதுராவின் ஆடைத் தெரிவுகளால்
மகிழ்வுற்ற அன்பர்கள், நண்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
மதுரா பட்டு மஹால் ஸ்தாபனத்தாரின்
★ உள்ளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள் ★

மதுரா பட்டு மஹால்
75, பெரியகடை, யாழ்ப்பாணம்.


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு:
09
11
1952

அன்னியன் அழிப்பு:
21
10
1987



### அமரர் சேர. யோகசுந்தரம்

(முன்னைநாள் தபால் தந்தி ஊழியரும், யோகா மினி பஸ் உரிமையாளரும்)

திதி: 13—11—1993

காலங்கள் மாறினாலும்
தேசங்கள் அழிந்தாலும்
அழியாத உன் நினைவுடன்
ஆறாண்டு காலமும்
வாடி நிற்கின்றோம்
தேடி அலைகின்றோம்.

— குடும்பத்தினர்.

''யோகா இல்லம்'',
24/3, 2ஆம் குறுக்கு வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(6801)

## சட்ட மூலம் நிறைவேறியது

கொழும்பு, நவ. 13

ரயில்வே அதிகாரசபைச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 100 எம்பிக்களும் எதிராக 30 எம்பிக்களும் வாக்களித்தனர். (ஓ—எ)

## மொழித்திறன் தேர்வு - 1993

14 – 11 – 1993 ஞாயிறு காலை நடைபெறவிருந்த இப் பரீட்சை மாணவர் நலன் கருதி பிற்போடப்பட்டுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதி விரைவில் அறிவிக்கப்படும். இதனால் ஏற்படும் சிரமங்களுக்கு வருந்துகின்றோம்.

தலைவர். பொதுச் செயலாளர்.

தமிழ் மன்றம்

[28021]

## தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி(முருகமூர்த்தி) கோயில்

### கந்தசஷ்டி விழா

### தெய்வீகப் பேருரைகள்

பொருள்: திருப்புகழ்

நிகழ்த்துபவர்: கந்தநிதி திரு. த. சிவகுமாரன்,
(ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, அமைப்பாளர்,- காரைநகர் கம்பன் கழகம்.)

நேரம்: மாலை 7 மணி முதல் 8 மணி வரை.

| காலம்: | | | பொருள்: |
|---|---|---|---|
| 14 — 11 — 1993 | ஞாயிறு | — | வாக்கிற்கு அருணகிரி |
| 15 — 11 — 1993 | திங்கள் | — | கல்லெல்லாம் மாணிக்க கல்லாமோ? |
| 16 — 11 — 1993 | செவ்வாய் | — | முத்திக்கொரு வித்து |
| 17 — 11 — 1993 | புதன் | — | கைத்தல நிறைகனி |
| 18 — 11 — 1993 | வியாழன் | — | ஆறுமுகமான பொருள் |
| 19 — 11 — 1993 | வெள்ளி | — | தெள்ளு தமிழ் பாடல் தெளிவோன் |
| 20 — 11 — 1993 | சனி | — | பெருவாழ்வைத் தருவாயே |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- கோயில் நிர்வாகம்.

(இ-6858)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.

## நொந்தவர்களுக்கு உதவுவோம்

இன்று தீபாவளித் திருநாள். அரக்கத்தனமும், அக்கிரமமும் உடையோர் ஆண்டவனால் அடக்கப்படுவர் என்பதனை நினைவூட்டுவதற்காக வகுக்கப்பட்ட நாள். உலகில் அநீதியும், அதர்மமும் மேலோங்கும் போது நான் தோன்றுவேன் என்று கீதையில் கூறிய கண்ண பரமாத்மா, விஷ்ணுவாக இருந்து நரகாசுரனை வதைத்ததன் மூலம் நீதியையும், தர்மத்தையும் நிலை நாட்டியதாகப் புராணம் கூறும் நாள்.

ஒவ்வொருவர் இதயத்திலும் அதர்மம் — அநீதி — அநியாயம் என்ற இருள் நீங்கி தர்மம் — நீதி — நியாயம் என்ற ஒளி ஏற்றப்படவேண்டும் என்பதனை வலியுறுத்தும் தத்துவம், புராணக் கதையின் அடிப்படை.

புராணத்தில் கூறப்பட்ட நரகாசுரனை, ஈழத் தமிழர்களாகிய நாம் ஸ்ரீலங்கா அரசாங்கம் என்ற வடிவத்தில் காண நேர்ந்துள்ளது. அந்த நவீன நரகாசுரன் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிட்டுள்ள அரக்கத்தனம், அக்கிரமம், கொடூரம், நீட்டுரத்தனம் என்பவை கடந்த சுமார் நாற்பது வருடங்களாகத் தொடர்கின்றன.

1983 ஆம் ஆண்டின் பின்னர் ஸ்ரீலங்கா அரசின் கொடுங்கோல் மேலும் கூரானது. கடந்த மூன்று வருடங்களாக அரசகோல் உருவமே மாறி கொடுவாளாகி இருக்கிறது. தமிழர்களைக் கொன்றொழிப்பதே அந்த நரகாசுரனின் பிரதான நோக்கம்.

அதனால்தான் அவன், தீபாவளி போன்ற விசேட நாட்களிலும் தமிழர்களின் உயிரைக் குடித்துவருகிறான். வடக்கு - கிழக்கில் தமிழருக்கு எதிராக யுத்தம் தொடங்கிய 1990 ஆம் ஆண்டில் தீபாவளி தினத்தன்று நரகாசுரனின் கிங்கரர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலி வடக்கில் அகோர விமானத் தாக்குதல்கள் நடத்தி தமிழர்களின் உயிரைப் பறித்ததை மறந்துவிட முடியாது.

வலி வடக்கைக் கைப்பற்றும் நான்கு முனைத் தாக்குதலை அன்றைய தினமே நவீன கிங்கரர்கள் ஆரம்பித்தனர். அவர்களின் விமான, ஹெலி, துப்பாக்கி வேட்டுக்களே தமிழர்கள் கண்ட தீபாவளி வேட்டுக்களாயின!

அதே போல இவ்வருடமும் தீபாவளிக்கு முதல் நாட்களிலேயே கிங்கரர்கள் தமது வேட்டுக்களைத் தீர்க்க ஆரம்பித்து விட்டனர். பூநகரியில் தமக்கு ஏற்பட்ட பெரும் இழப்புக்குப் ''பதிலடி''யாக அரசாங்கத்தின் யாழ். நிர்வாகச் செயலகத்தை குண்டு போடும் இலக்காக மாற்றி உள்ளனர்! பூநகரியில் இத்தனை கிங்கரர்கள் மாண்டு போன பின்னர், யாழ்ப்பாணத்தில் அரச செயலகமும், செயற்பாடும் எதற்கு என்று நினைத்தார்களோ என்னவோ...!

செயலகத்தின் மீது குண்டு வீசப்பட்டபோது அங்கிருந்து பணியாற்றிக் கொண்டிருந்த அரச அதிபர் காயமடைந்திருக்கிறார். கிங்கரர்களின் கண்மூடித்தனமான தாக்குதல்களுக்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு. காயமுற்ற அரச அதிபர் தமது பதவியிலிருந்து விலகினால் அது நவீன நரகாசுரனின் உண்மைத் தோற்றத்தை உலகுக்கு ஆணித்தரமாக நிரூபிப்பதற்கு உதவியாக இருக்கும்.

எப்படியோ, நவீன நரகாசுரனை அடக்குவதற்கு ஒரு கிருஷ்ணர் தோன்றும் வரை தமிழர்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. மறத்தை வென்று அறத்தை நிலை நாட்டுவதற்கு அவர்களே உழைக்க வேண்டும். தமக்கென ஓர் அரசை நிறுவ வேண்டும்.

மேலும் தீபாவளி போன்ற விழாக்களை உரிய விதத்தில் கொண்டாடுவது என்பது இன்றைய நெருக்கடியான காலத்தில் மற்றவர்களுக்கு, நொந்தவர்களுக்கு உதவுவது என்பதேயாகும். பண்டிகைகளை தெய்வ வழிபாட்டுடன் அமைதியாக அனுஷ்டிப்பதே இன்று உகந்தது.

★ விடுதலைப் புலிகளுடன்

# உடனே பேச்சை ஆரம்பித்து ஒரு தீர்வைக் காண வேண்டும்

## 'சண்டே ரைம்ஸ்' ஆசிரியர் வலியுறுத்து

கொழும்பு, நவ. 13

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை அரசாங்கம் உடனடியாக ஆரம்பித்து ஏதோ ஒரு வகையான தீர்வைக் காணவேண்டும்.

'சண்டே ரைம்ஸ்' ஆசிரியர் லலித் அழகக்கோன் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

பூநகரித் தாக்குதலின் விளைவு குறித்து அவரிடம் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

''நீண்ட காலமாக நடைபெற்றுவரும் இந்த யுத்தத்திற்கு தீர்வாக ஏதாவது ஒரு வகையான அரசியல் தீர்வைக் காண புதிய முயற்சி எடுக்கப்படும் வாய்ப்பு உண்டா?'' — என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் லலித் அழகக்கோன் மேலும் கூறியதாவது:-

புலிகளுடன் பேச்சு நடத்தும் அதேவேளை—

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தப்படவேண்டும். அவர்கள் எம்மிடமிருந்து பெருமளவு ஆயுதங்களை பூநகரித் தாக்குதலின்போது கைப்பற்றி விட்டார்கள்' என்று லலித் சொன்னார்.

கேள்வி: அப்பகுதியில் உள்ள விடுதலைப் புலிகள் இப்போது பலம் பொருந்தியவர்களாகிவிட்டார்கள் என்று கூறுகிறீர்களா?

லலித்: ஆம். அது சரி.

★ முன்னாள் விமானப்படைத் தளபதி பேட்டி

# புலிகளுடன் போரிடுவதற்கு ராணுவத்துக்கு பலம் இல்லை

## டி.. பியும் தன் போக்கை இனி மாற்றுவார்

லண்டன், நவ. 13

''பூநகரித் தோல்வி எப்படி ஏற்பட்டது என்பது பலரைத் திகைப்பில் ஆழ்த்தியுள்ளது. ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு தம்மைத் தற்காத்துக் கொள்ளும் திறன் கூட இல்லை என்று தோன்றுகிறது. அந்நிலையில் தாக்குதலைப் பற்றிப் பேசத் தேவையில்லை''

ஸ்ரீலங்கா விமானப்படையின் முன்னாள் தளபதி எயர் மார்ஷல் ஹரி குணதிலக நேற்று பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினார்.

''பிடித்த இடங்களை இராணுவம் தக்க வைத்துக் கொள்வது மென்மேலும் கஷ்டமாகி வருகிறது என்பதை இராணுவத்தின் இந்தத் தோல்வி காட்டுகிறது.

''விடுதலைப் புலிகளுடன் போரிடும் பலம் இராணுவத்துக்குக் கிடையாது என்று நான் இப்பொழுது உறுதியாக நம்புகிறேன். இத்தோல்விக்குப் பின்னர் ஜனாதிபதி விஜேதுங்கா தமது கடும்போக்குக் கொள்கையை புனர் மதிப்புச் செய்வார் என்று நம்புகிறேன்'' — இவ்வாறு பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் முன்னாள் விமானப் படைத் தளபதி மேலும் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை இராணுவம் மேற்கொள்ளாவிட்டாலும், எல்லைப் பகுதியைப் பாதுகாப்பதே இராணுவத்துக்கு மிகவும் கடினமானதாக இருக்கும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று அவர் மற்றொரு பேட்டியில் குறிப்பிட்டார்.

(உ-க-எ-6)

## ஹெலிக்கொப்டர்கள் இறங்க முடியாத நிலை!

பூநகரியில் படையினரிடம் இருந்து கைப்பற்றிய பீரங்கிகள் மற்றும் ஆயுதங்களை விடுதலைப் புலிகள் படையினரைத் திருப்பித் தாக்கப் பயன்படுத்துவதாகவும் —

இதனால் அப்பகுதியில் படையினரை மீட்கச் சென்ற ஹெலிக்கொப்டர்கள் இறங்க முடியாத நிலையில் இருப்பதாகவும் 'வெரித்தாஸ்' வானொலி அறிவித்தது.

## பாதுகாப்பு அமைச்சர் இல்லாததால் இந்நிலை!

### பூநகரி தாக்குதல் குறித்து சிறிமா அறிக்கை

நாடாளுமன்றத்துக்கும் நாடாளுமன்றம் மூலம் மக்களுக்கும் பதிலளிக்கக் கூடிய பாதுகாப்பு அமைச்சர் ஒருவரை நியமனம் செய்ய இப்போதைய அரசு தவறிவிட்டதால் இத்துன்பியல் தொடர்வதை நாம் காண்கின்றோம்.

— நாடாளுமன்றத்தில் நேற்று வெளியிட்ட அறிக்கையில் எதிர்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டார நாயக்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்புப் படையினரின் போர் உத்திகள் பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தனது அறிக்கையில் அரசுக்கு ஆலோசனை தெரிவித்தார்.

இந்திய அமைதிப்படையை திருப்பி அனுப்ப எடுக்கப்பட்ட முயற்சிகளுக்காக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவை தமது அறிக்கையில் அவர் குற்றஞ்சாட்டியிருந்தார். (உ-எ-6)

## பூநகரி நிலைமையை டி. பி. உன்னிப்பாக கவனிக்கிறார்!

கொழும்பு, நவ. 13

பூநகரி நிலைவரம் பற்றி ஜனாதிபதி விஜேதுங்கா உன்னிப்பாகக் கவனித்து வருகின்றார். விரைவில் அறிக்கை ஒன்று வெளியிடப்படும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சிறிமா பண்டார நாயக்கா ஒத்திவைப்புப் பிரேரணையின் போது எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

பூநகரிப் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் சண்டை இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகவும் —

ஆதலால் சண்டை குறித்து விவரமான பதிலைத் தரமுடியாது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

## ஜனாதிபதி நேற்று அவசர ஆலோசனை

கொழும்பு, நவ. 13

பூநகரித் தளம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்ததை அடுத்து ஜனாதிபதி விஜேதுங்கா நேற்று பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஹமில்டன் வனசிங்காவுடன் அவசர ஆலோசனை நடத்தினார்.

முக்கிய பாதுகாப்பு அதிகாரிகளும் அச்சந்திப்பில் கலந்து கொண்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

### சனநெருக்கடி மிகுந்த பகுதிகளில்

## விமானக் குண்டு வீச்சு! பழிவாங்கும் நடவடிக்கை

கொழும்பு, நவ. 13

பூநகரி படைமுகாம்கள் விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக ஸ்ரீலங்கா விமானப்படையின் போர் விமானங்கள் யாழ். குடாநாட்டில் சன நெருக்கடி மிகுந்த பகுதிகளில் குண்டு வீச்சு நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் இதனைத் தெரிவித்தார்.

விமானக்குண்டு வீச்சு நடத்தப்படுவதை உறுதிப்படுத்திய இராணுவ அதிகாரிகள் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது தான் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்படுவதாகத் தெரிவித்தனர்.

விமானக் குண்டுவீச்சில் யாழ். செயலகம் சேதமடைந்தது பற்றியும் [illegible] தெரிவிக்கப்பட்டது.

## ஆலயங்களில்

குடாநாட்டில் உள்ள பல ஆலயங்களில், குறிப்பாக அம்மன் கோவில்களில் கேதார கௌரி விரதம் இன்றுடன் பூர்த்தியாகிறது.

★ ★ ★

சங்கானை கூடத்துமனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இன்று சங்காபிஷேகத்துடன் கேதார கௌரீ நோன்பு பூர்த்தி விழா நடைபெறும் மகளிர் சேர்ந்து உபயமாக அளித்த இடப வாகனத்தில் அம்மாள் எழுந்தருளுவார்.

★ ★ ★

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் இன்று பிற்பகல் கௌரி நோன்பு நிறைவையொட்டி சங்காபிஷேகமும், இலட்சார்ச்சனையும் நடைபெறும்.

★ ★ ★

கன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் கோவிலில் கௌரி நோன்பு விழா விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறும். விசேட சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறும் (அ-89)

★ ★ ★

தெல்லிப்பழை கோவிற்புலம் அண்ணமார் ஆலயத்தில் தீபாவளியை ஒட்டி இன்று விசேட அபிஷேகமும் பூசையும் நடைபெறும்.

★ ★ ★

ஆனைக்கோட்டை வண். வடமேற்கு வீரமா பிடாரி அம்மாள் ஆலயத்தில் கடந்த 24 ஆம் திகதி முதல் இலட்சார்ச்சனைஹோமப் பெருவிழா நடைபெற்று வருகிறது.

இன்று சனிக்கிழமை இலட்சார்ச்சனை பூர்த்தியும், விசேட அபிஷேக ஆராதனைகளும் ஹோம பூர்த்தியும் இடம்பெறும். (ஒ)

### அறம்...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்து தேவர்களையும், நரகர்களையும் துன்புறுத்தி இறுதியில் அழிந்து போன வரலாற்றையும் காண்கின்றோம்.

அத்தகைய வரலாறே நரகாசுரனுடையதுமாகும். எனினும் அதர்மம் ஒழிக்கப்பட்ட தினம் நினைவு கூரப்படவேண்டும் என்று விஷ்ணுவிடம் [illegible] அவர் [illegible] அதுவே [illegible]

★

## இரத்தம் அவசரம் தேவை

யாழ்.இரத்தவங்கிக்கு இரத்தம் அவசரமாகத் தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பொது மக்கள் தாமாக முன்வந்து இரத்த தானம் செய்யவேண்டும் என்றும் கோரப்பட்டிருக்கிறது.

### மயிரிழையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாம் ஒருவார காலத்தில் மீண்டும் கடமைக்கு செல்ல இருப்பதாகவும்—

நேற்றைய தாக்குதல் சம்பவம் தமக்கு ஏற்பட்ட இரண்டாவது அனுபவம் என்றும்—

கிளிநொச்சியில் அரசாங்க அதிபராக தாம் கடமையாற்றிய சமயம் தாம் தங்கியிருந்த விடுதி மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலின்போதும் தாம் மயிரிழையில் உயிர் தப்பியதாகவும்— அரச அதிபர் தெரிவித்தார்.

காயம் அடைந்த அரச அதிபருக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது.

சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பிய அவர் தற்போது தமது வீட்டில் தங்கி இருந்து ஓய்வு எடுத்து வருகிறார்.

### பூநகரி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களில் பலர் இளம் சிப்பாய்கள் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

பூநகரி படைத் தளத்தில் இருந்த பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றி, அவற்றை இப்போது இராணுவத்துக்கு எதிராக பயன்படுத்த தொடங்கியிருப்பதால் அவர்களது சக்தி மேலும் அதிகரித்திருப்பதாகவும் —

இதனால் சிக்குண்ட சிப்பாய்களை வான் மார்க்கமாக மீட்கும் முயற்சி நினைத்தும் பார்க்க முடியாததாக இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கைகூடவில்லை

சிக்குண்ட சிப்பாய்களை ஹெலி மூலம் மீட்க முயற்சிக்கப்பட்ட போதிலும் —

ஹெலிகளை தரையிறங்க விடாது தரையிலிருந்து புலிகள் தாக்கி வருவதால் அந்த முயற்சிகளும் கைகூடாமல் போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

காலநிலை சீர் கெட்டிருப்பதும் வான் மூலம் மீட்பு முயற்சியை தடுத்து வருவதாக அரச தரப்பில் கூறப்பட்டது.

மீட்பு முயற்சியை மேற்கொள்வதில் படைத்தளபதிகள் திணறுகின்றனர்.

சிக்குண்டோரை மீட்பது என்பது பெரும் கஷ்டமான காரியம் என இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இது வரை நடைபெற்ற சண்டையில் நானூறுக்கும் அதிக படையினர் உயிரிழந்ததாகவும் —

சுமார் 350 படையினர் வரை படுகாயமுற்றதாகவும் முதலில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் படுகாயமுற்ற படையினர் மீட்கப்படவோ அல்லது அவசர முதலுதவிச் சிகிச்சைக்கு உட்படுத்தப்படவோ முடியாத நிலையில் உயிரிழப்பதாகவும் —

இதனால் உயிரிழந்த அருப்புகளின் எண்ணிக்கை எழுநூறைத் தாண்டியிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

600 சிப்பாய்களை காணவில்லை

இருநூற் றியம்பதுக்கும் அதிக படையினர் உயிரிழந்ததாகவும் —

சுமார் அறுநூறு சிப்பாய்கள் காணாமற் போயிருப்பதாகவும் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' அறிவித்தது.

''பூநகரித் தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிப்பது தொடர்கிறது. பூநகரி நிலைவரம் பற்றியோ, அங்கு கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை பற்றியோ இராணுவத் தளபதிகள் இன்னும் ஒன்றுமே கூறாதிருக்கிறார்கள். அவர்களின் மௌனம், கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க அதிகமாக இருக்கும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

''இதனால் முதலில் வர்ணிக்கப்பட்ட பேரழிவிலும் பார்க்க பூநகரி வீழ்ச்சி அரச படையினருக்கு மிக மிக மோசமான பேரழிவாக இருக்கலாம் என்று இப்போது எதிர்பார்க்கப்படுகிறது'' — இவ்வாறு பீ. பீ. ஸியின் கொழும்புச் செய்தியாளர் குறிப்பிட்டார்.

# 500 சிப்பாய்கள் புலிகளிடம் சரண்?

கொழும்பு, நவ. 13

பூநகரிப் பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் சிக்கியுள்ள படையினரைச் சரணடையும்படி விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர் என்றும் —

உறுதிப்படுத்தப்படாத செய்திகளின் படி சுமார் ஐந்நூறு சிப்பாய்கள் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்து விட்டனர் என்றும் இந்திய வானொலி தெரிவித்தது.

## முப்படைகளின் தளபதிகள் வடக்கில்

பூநகரித் தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்ததை அடுத்து முப்படைகளின் தளபதிகளும் வடக்கே விரைந்திருப்பதாகவும் -

வடக்கில் தங்கியிருந்து அடுத்து எடுக்கப்பட வேண்டிய உத்திகள் குறித்து அவர்கள் கவனம் செலுத்தி வருவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

நேற்று நண்பகலில் பலாலிப் பகுதியிலிருந்து ஏழு ஹெலிக்கொப்டர்கள் வரிசையாகப் புறப்பட்டு பூநகரிப் பக்கமாகச் சென்று சற்று நேரத்தின் பின் மீண்டும் வரிசையாக பலாலிக்குத் திரும்பிச் சென்றன. நிலைமைகளை அவதானிப்பதற்காக முப்படைத் தளபதிகளும் மற்றும் உயரதிகாரிகளும் இந்த ஹெலிக் கொப்டர்களில் பூநகரிப் பகுதிக்கு மேலாகச் சென்று வட்டமிட்டுத் திரும்பியிருக்கலாம் என்று கருதப்பட்டது.

(உ-எ)

## தெரிவுக்குழு அறிக்கை நேற்று நாடாளுமன்றில்

இனப் பிரச்சினைக்கு தீர்வு காண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

தெரிவுக்குழுவின் அறிக்கையை தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்கா சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கை அச்சிடப்பட வேண்டும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான விஜேபால மெண்டிஸ் நாடாளுமன்றத்தில் பிரேரித்தார்.

இதனை நாடாளுமன்றம் ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

1991 நடுப்பகுதிகளில் நியமிக்கப்பட்ட இந்த தெரிவுக் குழு இதுவரை 47 அமர்வுகளை நடத்தி உள்ளது.

தமிழர்கள் கோரியுள்ள சுயாதீனத்தை அதிகாரப் பரவலாக்கல் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது என்றும் -

எனினும் விடுதலைப்புலிகள் நடத்தி வரும் யுத்தத்தை நிறுத்துவதற்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்மானம் எதனையும் தெரிவுக் குழுவினால் எடுக்க இயலாது போய்விட்டது என்றும் -

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்து இணைக்கப்பட்டிருக்குமா அல்லது தனித்தனி மாகாணங்களாக பிரிக்கப்படுமா என்ற முக்கிய விடயம் குறித்து தெரிவுக் குழுவினால் திரமானம் எடுக்க முடியாது போய்விட்டது என்றும் - வெரித்தாஸ் வானொலி நேற்றுத் தெரிவித்தது.

### ஒப்பரேஷன் தவளை

விடுதலைப் புலிகள் பூநகரி இராணுவ கடற்படைக் கூட்டுத் தளம் மீது நடத்திய பாரிய தாக்குதலுக்கு 'ஒப்பரேஷன் தவளை' என்று பெயரிடப்பட்டிருந்தது.

தரையிலும் கடலிலுமாக இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

## இன்று

அல்வாய் வடக்கு நக்கீரன் சன சமூக நிலையத்தில் 45 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், இல்ல மெய்வல்லுநர் போட்டிகளும் இன்று தீபாவளி தினத்தன்று நிலைய மைதானத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

'நான்' உளவியல் சஞ்சிகையினரால் நடத்தப்படும் மாதாந்த உளவியல் ஆய்வரங்கு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரிய குளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும்.

திருமதி பி. எல். சின்னத்துரை, திரு. ஏ. பி. சி. ஆனந்தராஜா ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்துவர்.

(ஓ-51)

★ ★ ★

சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு விழாவும், விளையாட்டுப் போட்டியும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணியளவில் சுன்னாகம் மயிலணியில் திரு. ஐ. செல்வராசா தலைமையில் நடைபெறும்.

(ஒ-89)

### யாழ் செயலகம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தான பகுதிகள் சேதம் அடைந்துள்ளன.

செயலக யன்னல்கள் நொருங்கிக் காணப்படுவதுடன், செயலகத்தின் பெயர்ப் பலகையும் சேதம் அடைந்துள்ளது. செயலகக் கூரைகள் பிரிந்த நிலையில் திறந்தவெளியாகக் காணப்படுகின்றன.

அரச செயலகத்துக்கு அருகில் உள்ள திணைக்களங்களின் கண்ணாடிகளும், வை. எம். சீ. ஏ. கட்டடத்தின் யன்னல்களும் கூரையும் சேதமடைந்தன. கண்டுக்குளி தபால் நிலையம், சாந்திகம் உளவள நிலையம் ஆகியவையும் சேதம் அடைந்தன.

இ-111-143-162-17-15-5-3

### 200 க்கும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதிகள் எங்கும் கறுப்புக் கொடிகளும், வாழை தோரணங்களும் கட்டப்பட்டுள்ளன. முக்கிய சந்திகளில் சோக கீதங்கள் ஒலிபரப்பாகி வருகிறது.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களில் 11 போராளிகளின் வித்துடல்கள் இணுவில் மத்திய கல்லூரியிலும் —

மேலும் 11 மாவீரர்களின் வித்துடல்கள் மீசாலை விக்கினேஸ்வராக் கல்லூரியிலும் — மக்கள் அஞ்சலிக்காக நேற்று வைக்கப்பட்டன.

(உ-3-15-17 143-162)

### அள்ளப்பட்ட...

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| ★ | ஆர். பி. ஜி. | — 19 |
| ★ | 60 மி. மீ. மோட்டர்கள் | — 19 |
| ★ | நவீன ராடர்கள் | |
| ★ | மினி. மி. இலகு இயந்திர துப்பாக்கி | — 9 |
| ★ | ஏ.கே. ரக ஜி.பி.எம்.ஜி. துப்பாக்கி | — 6 |
| ★ | ஜி. பி. எம். ஜி. துப்பாக்கி | — 5 |
| ★ | 81 மி.மீ. மோட்டர்கள் | — 2 |
| ★ | எம். 203 ரக லோஞ்சர்கள் | — 3 |
| ★ | 40 மி.மீ. டொங்கான் | — 4 |
| ★ | 303 ரக இலகு இயந்திர துப்பாக்கி | — 3 |
| ★ | எல். 3 ரக இயந்திர துப்பாக்கி | — 4 |
| ★ | ரீ. 81 ரக இலகு இயந்திர துப்பாக்கி | — 1 |
| ★ | எம். 16 கே. 2 ரக துப்பாக்கி | — 11 |
| ★ | ஏ. கே. ரக துப்பாக்கி | — 304 |
| ★ | டாங்கி பீரங்கி ஷெல்கள் | — 185 |
| ★ | நடுத்தர ரவைகள் — ஒரு லட்சத்துக்கு மேல் | |

பட்டமரம் மட்டும் எடு
பதிலுக்கு இரு மரம் நட்டு விடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிற்போடப்பட்டுள்ளது

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வலிகாமம் வடக்குப் பிரிவு, யாழ். கிளையின் அனுசரணையுடன் 14-11-93 ஞாயிற்றுக்கிழமை நடத்தவிருந்த செஞ்சிலுவைச் சங்க ஸ்தாபகர் ஹென்றிடுனான் ஞாபகார்த்த விழா, இன்றைய சூழ்நிலை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

கௌரவ செயலாளர்
வலிகாமம் வடக்குப் பிரிவு
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்.

மல்லாகம்.
(28034)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி செல்லையா உதயராணி
### வீரவேங்கை விஜயா (பூமகள்)

புங்குடுதீவு 6, இறுப்பிட்டியை பிறப்பிடமாகவும், கொக்குவில் பிரம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி செல்லையா உதயராணி பூநகரி மோதலில் வீரமரணமடைந்து விட்டார். இவர் அம்பலவாணர் செல்லையா — உருத்திராதேவி (மகேஸ்வரி) யின் அன்பு மகளும், உதயகுமார், உதயபவானி, உதயரஜனி, உதயரமா, சசிகலா ஆகியோரின் அன்புச்சகோதரியும், சிவராசலிங்கம், கமலானந்தன், பாக்கியநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுஜாயினி, சோபசாலினி, சகானா, அர்ச்சனா, டினேயா ஆகியோரின் சிறிய தாயாரும், திரு. திருமதி ஆறுமுகம் ஆகியோரின் பெறாமகளும், தவக்குமார், தவகரன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
அ. செல்லையா
(தந்தை)

36/17 பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.
(28033)

## கணபதிப்பிள்ளை கமலானந்தன்
### (முன்னாள் புகையிரத பாதுகாவலர்)

காரை நகரைப் பிறப்பிடமாக கொண்டவரும் இல. 58 நெடுங்குளம் வீதியில் வசித்தவருமாகிய கணபதிப்பிள்ளை கமலானந்தன் 12-11-93 வெள்ளிக்கிழமை அகால மரணமானார் இவர் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை பாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும், ஞானாம்பிகையின் அன்புக் கணவரும், சாந்தி, பார்த்திபன் (சென். சாள்ஸ் வித்தியாலயம்), சுமதி (கனகரட்ணம் ம. ம. வி.), ஆதவன், செல்வி, ஆதித்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சாரங்கனின் அன்புப் பேரனும், ரட்ணகுமாரின் மாமனாரும், மதிமுகநாயகியின் சகோதரரும், சோமசுந்தரம் - கமலாம்பிகை ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற யோகசுந்தரம், சந்திரசேகரம், சற்குணமலர், கமலநாதன், மோகனமூர்த்தி, சிவசுந்தரம் ஆகியோரது மைத்துனரும், சிறீஸ்கந்தராசாவின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று 13-11-93 காலை 10.00 மணிக்கு துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ. சிவசுந்தரம்
(யாழ். மத்திய கல்லூரி)

(6305)

## அருட்சகோதரி மரியா ஞானாதிக்கம் (தி.கு)

இளவாலை பத்தாவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருக்குடும்பச் சபையைச் சேர்ந்தவருமான அருட்செல்வி மரியா அவர்கள் 12-11-93 வெள்ளிக் கிழமை பாஷையூர் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் இறைபதமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 13-11-93 சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். புனித கொஞ்சேஞ்சிமாதா ஆலயத்தில் திருப்பலியுடன் இடம்பெறும்.

தகவல்
மாகாணத் தலைவி

மாகாணஇல்லம்,
யாழ்ப்பாணம்.
(28032)

## கனகாம்பிகை கனகசபை

கனகாம்பிகை கனகசபை 12. 11. 93 வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செ. அன்ரன் [அதிபர் குளமங்கால் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்] திருமதி யோ. நி. லாபர், ஞானசோதி, தேவசோதி, திருசத்தியசோதி, அருட்சோதி. திருமதி யே. எட்வெட் ஆகியோரின் அருமை சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று 13. 11. 93 காலை 10 மணிக்கு மல்லாகத்தில் இடம் பெறும். உற்றார், உறவினர். நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
செ. அன்ரன்

''செல்வகிரி''
மல்லாகம்.
(28036)

## வில்லியம் சின்னதுரை தேவதாசன்

சாவகச்சேரி டச் றோட்டைச் சேர்ந்த வில்லியம் சின்னதுரை தேவதாசன் நேற்று வெள்ளிக்கிழமை 12-11-1993 காலமாகிவிட்டார்.

இவர் கமலாவின் (இளைப்பாறிய ஆசிரியை சாவகச்சேரி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், தேவரஞ்சனி (நோர்வே), காலஞ்சென்ற விஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கேசவானந்தனின் (நோர்வே) மாமனாரும், திருமதி நல்லம்மா இராஜரட்ணத்தின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை 30ª, கல்லூரி வீதி, வட்டுக்கோட்டையில் இன்று 13-11-93 மாலை 3 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கமலாதேவி
(மனைவி)

கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை.
(28037)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13. 11. 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




குண்டு வீச்சில் சேதமுற்ற செயலகத்தின் முகப்புத் தோற்றம்.




குண்டு வீச்சில் சிதறிக் கிடக்கும் செயலக பெயர்ப் பலகை.

# யாழ். செயலகத்தை இடம் மாற்ற முயற்சி

யாழ்ப்பாணம், நவ. 13

குண்டு வீச்சினால் சேதம் அடைந்துள்ள யாழ் செயலகத்தை வேறு ஓர் இடத்தில் இயங்க வைப்பதற்கான முயற்சியில் யாழ். அரச அதிபர் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

செயலகத்தில் உள்ள சகல பிரிவுகளையும் ஒரே இடத்தில் இயங்க வைக்கத்தக்கதாக நகரின் மத்தியில் ஓர் இடத்தைத் தெரிவு செய்வது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

செயலகத்தை இயங்க வைப்பதற்காக பரிசீலனையில் உள்ள இடங்களில் யாழ். விக்டோரியா வீதியில் உள்ள சுபாஸ் ஹோட்டலும் ஒன்று என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# நகரப் பாடசாலைகள் உடன் மூடப்பட்டன

யாழ்ப்பாணம், நவ. 13

நேற்றுக் காலை இடம்பெற்ற சுப்பர் சோனிக் விமானத் தாக்குதலை அடுத்து அனேகமான யாழ். நகரப் பாடசாலைகள் மூடப்பட்டு மாணவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

குறிப்பாக தாக்குதல் நடத்தப்பட்ட இடத்துக்குச் சமீபமாக உள்ள சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்கள் பெரும் பீதி அடைந்தனர். இந்த களேபரத்தில் மாணவர்கள் சிலர் நெரிசலில் சிக்குண்டும் விழுந்தும் காயம் அடைந்தனர்.

விமானத் தாக்குதலை அடுத்து சில தனியார் கல்வி நிலையங்களும் மூடப்பட்டன. இலங்கை வங்கியும் அரை நேரத்துடன் மூடப்பட்டது. (இ-17-143-15)

# காயமுற்றோர்

யாழ். செயலகத்தின் மீது நேற்று நடத்தப்பட்ட குண்டு வீச்சில் காயமுற்றோர் விவரம் வருமாறு:-

★ அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் (வயது 59)
★ மாலிலாமணி புவனேந்திரன் (வயது 37) - தெல்லிப்புரம் வாசி. செயலக ஊழியர். காலில் படுகாயமடைந்தார்.
★ மு. காசிப்பிள்ளை (வயது 55) - அரியாலை வாசி. செயலக ஊழியர்.
★ பூபாலசிங்கம் (வயது 45) - கொழும்புத்துறையைச் சேர்ந்தவர். செயலக ஊழியர்.
★ மாரிமுத்து சிவரத்தினம் (வயது 50) - கோண்டாவில் வாசி. யாழ். அரச அதிபரின் செயலக உதவியாளர்.
★ வேலாயுதம் கதிர்காமு (வயது 63) - கைதடி.
★ வைரமுத்து கோபால பிள்ளை (வயது 54) - கைதடி.
★ வல்லிபுரம் சந்திரன் (வயது 38) - அரியாலை.
★ வேலு பரமசிவம் (வயது 34) - கல்வியங்காடு.
★ சூசை வின்சன்ட் (வயது 55) கச்சேரியடி - படுகாயமடைந்துள்ளார்.
★ மனுவன் அன்ரனி (வயது 70) - குருநகர்.
★ சோமசுந்தரம் செல்வராணி (வயது 30) - கச்சேரியடி.
★ சிந்தாமணி இந்துசிகாமணி (வயது 26) - அக்சராயன், கோணாவில்.
★ வேலு கணேஷ் (வயது 27) - முழுங்கன்.
★ கனகலிங்கம் கேதீஸ்வரன் (வயது 18) - மட்டுவில்.
★ முருகேசு வசீதரன் (வயது 28) - சாவகச்சேரி.
★ சந்திரகுலசிங்கம் (வயது 27)
★ நாகேஸ்வரன் (வயது 24)
★ கேதீசன் (வயது 20)
★ வர்ணன் (வயது 22)
★ சந்திரகுலேஸ் (வயது 27)
★ மதியழகன் (வயது 21)
★ மணிவண்ணன் (வயது 19)
★ வதனன் (வயது 21)
★ மா. வில்சன் (வயது 20)

(உ-15)

## வாழ்த்துகிறோம்

செங்கை ஆழியான்
கலாநிதி க. குணராசா
அவர்களின்
யாழ்ப்பாணத்து இராத்திரிகள்
நாளை இடம்பெறும் நூல் வெளியீட்டு விழா சிறப்பாக இடம்பெற எமது உளம் நிறைந்த
★ நல் வாழ்த்துக்கள் ★
— விவேகா கல்வி நிறுவனம்.

[சி-6545]

# ஜனாதிபதிக்கு அரச அதிபர் முறையீடு

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ். செயலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவுக்கும் முறைப்பாடு செய்துள்ளார்.

ஹமில்டன் வனசிங்காவுக்கு அவர் அனுப்பிய கடிதத்தில் 25 மைல்களுக்கு அப்பால் சண்டை நடந்து கொண்டிருக்கும் போது யாழ். செயலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதன் காரணம் என்ன என்று கேட்டுள்ளார்.

அதேசமயம் தாக்குதலின் போது காயம் அடைந்த அரச அதிபரை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு அதிகாரி பியட்சுவெஸ்லர் சென்று பார்வையிட்டார். (இ-17-3-5)

# ஊழியர்களை சமுகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ். செயலக ஊழியர்கள் அனைவரையும் இன்று காலை வழமையான நேரத்திற்கு செயலகத்தில் சமுகம் அளிக்குமாறு செயலக அதிகாரி கோரி உள்ளார்.

நேற்றைய தாக்குதலை அடுத்து செயலகம் உடனடியாக மூடப்பட்டதும்—

காவல்துறையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (இ-3)

# ஆவணங்கள் மழையால் நனையும் நிலை

யாழ்ப்பாணம், நவ. 13

விமானத் தாக்குதலினால் சேதமடைந்த பகுதிகளில் உள்ள ஆவணங்கள், மற்றும் பதிவுகள் நேற்றைய மழை காரணமாக அழிந்து போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலின் போது ஆவணங்கள் பல சிதறுண்டு போனதாகவும் —

செயலகத்தின் மேல்மாடியில் மழை காரணமாக வெள்ளம் நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-5-15)

# சைவசமய பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 13

காரைநகர் மணிவாசகர் சபை வருடாந்தம் நடத்தும் சைவசமயப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் சுட்டெண், பரீட்சை நிலையம் போன்ற விவரங்கள் காரைநகர் கொத்தணி பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 57

# ஒத்திவைப்பு

யாழ். ஜொனியன்ஸ் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இந்நிகழ்ச்சி இன்று நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

# அகண்ட பஜனை

யாழ்ப்பாணம், நவ. 13

அரியாலை பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா சேவா நிலையத்தின் 24 மணிநேர அகண்ட பஜனையும் பிரார்த்தனையும் இன்று மாலை 6 மணி முதல் நாளை மாலை 6 மணி வரை நடைபெறும்.

கொழும்புத்துறை ஆனந்தன் வடலி வீதியில் உள்ள மேற்படி நிலையத்தின் ''பிரசாந்தி நிலைய'' மண்டபத்தில் பிரார்த்தனை நிகழ்ச்சி இடம் பெறும். (ஓ-162)

## ஒத்திவைப்பு

நல்லூர் சட்டநாதர் வீதி கலைத்தமிழ் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று நடைபெற விருந்த சமய அறிவுப் போட்டிப் பரிசளிப்பு வைபவம் தற்போதைய சூழ்நிலையால் பிற்போடப்பட்டுள்ளது.

நன்றி.
—செயலாளர்.
(28035)

## வாழ்த்துகிறோம்

செங்கை ஆழியான்
கலாநிதி க. குணராசா
அவர்களின்
✲ யாழ்ப்பாணத்து இராத்திரிகள் ✲
நாளை இடம்பெறும் நூல் வெளியீட்டு விழா
சிறப்பாக இடம்பெற
எமது உளம் நிறைந்த நல் வாழ்த்துக்கள்
★ வளர்க அவர் கலைத் தொண்டு ★

க. கலாகரன்,
S. K. பிரபாகரன்

[சி-6546]

யாழ்ப்பாணம் இருபாலை வேளாதோப்பு
## ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான
# கந்தசஷ்டி உற்சவ விஞ்ஞாபனம்

★ காலம்:
14 - 11 - 1993 ஞாயிறு முதல்
20 - 11 - 1993 சனிக்கிழமை வரை
(6 நாட்கள்)

விசேட நிகழ்ச்சிகள்
19 - 11 - 1993 வெள்ளிக்கிழமை சூரசம்மாரமும்
20 - 11 - 1993 சனிக்கிழமை திருக்கல்யாணமும் நடைபெறும்.

முருகபக்தர்கள் யாவரும் உற்சவ காலங்களில் பங்குபற்றி இஷ்டசித்திகளை பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி;

இங்ஙனம்,
திருமதி பாலசவுந்தரி சின்னத்தம்பி,
க. பாக்கியராசா,
(தர்மகர்த்தாக்கள்),

[28013]

# பதவி வெற்றிடம்

நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன் குன்றியோர் பாடசாலை,
கைதடி.

1. ஆசிரியர் ஆண் / பெண்

தகைமை: க.பொ.த. உயர்தரம் 3 பாடம் ஒரே தடவை.
மேலதிகம்; ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் (விசேட சித்தி)
ஊதியம்; 6 மாத பயிற்சியின் பின்

$$\frac{2010 - 3170}{14 \times 55 \quad 6 \times 65}$$

2. விடுதி மேற்பார்வையாளர்: ஆண் / பெண்

தகைமை: க.பொ.த (சா.த)
மேலதிகம்: ஆண் — விவசாயப் பயிற்சி.
பெண் — கைவேலைகளிற் பயிற்சி
ஊதியம்: 6 மாத பயிற்சியின் பின்

$$\frac{1650 - 2650}{20 \times 50}$$

விண்ணப்ப முடிவு திகதி: 30-11-1993

— அதிபர்

(சி/6316)

தமிழீழ மக்களின் நலன் கருதி

# இலவச பற்சிகிச்சை
## (FREE DENTAL SERVICE)

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 14-11-93 8.30 மணி முதல் 12-00 மணி வரை எமது மருத்துவ மனையில் இலவச பற்சிகிச்சை அளிக்கப்படும்,

''எம் கடன் பணி செய்வதே''

## வில்லியம் ஹாவே
### தனியார் மருத்துவமனை,
WILLIAM HARVEY PRIVATE HOSPITAL

இல. 17, கண்டி வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

No. 17. Kandy Road,
Chundikuli,
Jaffna.

(6804)

# சாரணிய இறுதி அஞ்சலி

பூநகரி மோதலின் போது வீரச்சாவை தழுவிக் கொண்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கடற்சாரணன்

## கடற்புலி விவேகன்
(பாலசுப்பிரமணியம் பாலசொரூபன்)

அவர்களுக்கு எமது சாரணிய அஞ்சலிகள்.
பாடித்திரியும் பறவை இனமென
கூடிக்களித்த நாள் கொஞ்சமோ
வேடிக்கை பார்த்த விழி பனித்து நாமிருக்க
ஒடித்தான் போனதேன்! நண்பனே!

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
கடற்சாரணர்.

(சி/6360)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org